# நல்லாட்சிக்கு இலக்கணமாக ‘திராவிட மாடல்’ ஆட்சி உள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

முதல் பக்கத் தொடர்ச்சி

பா.ஜ.க. விரும்பியபடி அந்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. நியாயமற்ற அரசாக பா.ஜ.க செயல்படுவதால்தான் தொகுதி மறுசீரமைப்பு குறித்த அதன் தெளிவற்ற விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை.

**செய்தியாளர்:** தமிழ்நாட்டிற்கும் ஒன்றிய அரசுக்கும் இடையே உள்ள இன்னொரு பிரச்சினை மும்மொழிக் கொள்கையாகும். இந்தித் திணிப்பு என்பது உங்களின் அச்சமா? அல்லது உண்மையான பயமா?

**முதல்வர்:** இந்திமொழி ஆதிக்கம் என்பது எத்தகைய மோசமான விளைவுகளை உருவாக்கும் என்பதற்கும், இந்தித் திணிப்பினால் வடமாநிலங்களிலேயே பலர் அவரவர் தாய்மொழிகளையும், வட்டார மொழிகளையும் கடந்த ஐம்பதாண்டுகளில் இழந்திருப்பதையும் ஆதாரத்துடன் முன்வைத்திருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்ததும் இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். அதுதான் இன்றைய தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழி பண்பாட்டின் பாதுகாப்பிற்கும் அடித்தளமாக உள்ளது. மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாடு உறுதியுடன் எதிர்ப்பதற்கு காரணம், அது தமிழ்நாட்டின் வளர்ச்சியை சிதைக்கும் நோக்கிலான பா.ஜ.க. அரசின் மறைமுகத் திட்டம் என்பதால்தான்.

**செய்தியாளர்:** பிரித்தாளும் மற்றும் எதிர்ப்பு அரசியலை நீங்கள் மேற்கொண்டு வருகிறீர்கள் என்று பா.ஜ.க. குற்றம் சாட்டியுள்ளது. இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**முதல்வர்:** அரசியல் சட்டம் தந்த கூட்டாட்சி கோட்பாட்டை பாதுகாக்க குரல் கொடுப்பதும், அரசியல் சட்ட அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட மொழிகளை வளர்க்கப் பாடுபடுவதும் எப்படி பிரிவினை அரசியலாக இருக்க முடியும்? வெறுப்பையே அரசியல் கொள்கையாகக் கொண்ட பா.ஜ.க., உருவாக்கிய மதக் கலவரங்கள், இனக்கலவரங்கள் இன்னமும் இந்திய வரலாற்றின் கறை படிந்த பக்கங்களாக உள்ளன. மணிப்பூர் மாநிலம் இப்போதும் கலவரத்தின் பச்சை ரத்தம் காயாத பூமியாக உள்ளது. நாடு போர்க்களத்தில் நின்ற ஒவ்வொரு நேரத்திலும் துணை நின்று அதிக அளவில் நிதி தந்து இந்த நாட்டிற்கு உற்ற துணையாக இருந்த தமிழ்நாட்டைப் பார்த்து தி.மு.க.வைப் பார்த்து பா.ஜ.க.வினர் குற்றம்சாட்டுவது, மல்லாக்கப்படுத்துக் கொண்டு எச்சில் துப்புவது போலத்தான் இருக்கிறது.

**செய்தியாளர்:** பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி குறித்து உங்களின் கருத்துகள் என்ன? அது ஒரு நிலையான எதிர்க்கட்சியாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**முதல்வர்:** இது தி.மு.க. அணியால் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்ட கூட்டணிதான்! ஒரு முறை அல்ல; இரு முறை! 2024 நாடாளுமன்றத் தேர்தலிலேயே இரு கட்சிகளும் பிரிந்தது போலத் தெரிந்தாலும் கள்ளக்கூட்டணியாகத்தான் இருந்தார்கள் என்று குற்றம் சாட்டினேன். அதை வெளிப்படுத்தும் வகையில்தான் அண்மைக்கால நிகழ்வுகள் இருந்தன. தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்யும் பா.ஜ.க.வையும், அதனுடன் கூட்டணி சேர்ந்து துரோகம் இழைக்கும் அ.தி.மு.க.வையும், மூன்றாவது முறையும் தமிழ்நாட்டு மக்கள் தோற்கடிப்பார்கள்.



SUNDAY TIMES

'WE ARE FORCED TO FIGHT PERPETUALLY TO GET JUSTICE'

The reason for TN's strident opposition to three-language policy is because it is a covert design by BJP govt to ruin TN's growth

**செய்தியாளர்:** எதிர்க்கட்சிகள், உங்கள் அரசுக்கு எதிராக லஞ்ச ஊழல் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சினை குறித்து குற்றச்சாட்டு கூறுகிறார்களே? அது குறித்து நீங்கள் தெரிவிப்பது என்ன?

**முதல்வர்:** முத்திரைத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி, நல்லாட்சிக்கு இலக்கணமாக திராவிட மாடல் அரசு செயலாற்றி வருகிறது. நலத் திட்டங்களின் பயனாளிகளாக இருக்கும் மக்கள் போற்றுகிறார்கள். பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சீரழிந்து கிடந்த நிர்வாகம் இப்போது சீரடைந்து இருக்கிறது. சட்டம் ஒழுங்கு, பொது அமைதியை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு காவல்துறை தலைநிமிர்ந்து செயலாற்றுகிறது. தொழில் முதலீடுகள், புதிய வேலை வாய்ப்புகள், மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சி என தமிழ்நாடு முதன்மை மாநிலமாக – முன்னணி மாநிலமாக நிற்கிறது. இவற்றை பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சிகள், இந்த அரசின் மீது எவ்வித குற்றச்சாட்டையும் கூற முடியாத எதிர்க்கட்சிகள், கற்பனை குற்றச்சாட்டுகளைக் கூறி விதண்டவாத அரசியலும் வீண் பிரச்சாரமும் செய்கிறார்கள்.

**செய்தியாளர்:** உங்கள் கூட்டணிக் கட்சிகளான குறிப்பாக விடுதலை சிறுத்தைகள் இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளும் சில பிரச்சினைகள் குறித்து குறிப்பாக மதுக் கொள்கை தொடர்பாக விமர்சிக்கிறார்களே? அது பற்றி உங்கள் கருத்து?

**முதல்வர்:** தோழமைக் கட்சியினரின் ஆலோசனைகள் மட்டுமின்றி ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் கேட்டு, அவர்களின் ஒத்துழைப்புடன்தான் இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தோழமைக் கட்சியினரின் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை நான் எப்போதும் மதிக்கிறேன்.

### கவனமாக பொறுப்புடன் திட்டங்களை நிறைவேற்றுகிறோம்!

**செய்தியாளர்:** 2026 மார்ச் 31ஆம் தேதி வரை தமிழ்நாட்டின் கடன் ரூ.9.29 லட்சம் கோடி என்று உங்கள் அரசே ஒப்புக்கொண்டுள்ளது அதை எப்படி மீட்டெடுக்கப் போகிறீர்கள்?

**முதல்வர்:** தமிழ்நாட்டை கடனில் மூழ்கடித்து விட்டு காலி கஜானாவை விட்டுச் சென்ற ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி. அதன் பிறகு நிதி நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து திறம்பட்ட நிதி மேலாண்மை மூலம் நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்புக்குள் உள்ள மாநிலம், தமிழ்நாடு. 10 இலட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, பொருளாதாரச் சூழலை நாங்கள் முன்னேற்றியுள்ளோம். முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்பது தமிழ்நாட்டின் அடையாளமாகியுள்ளது. 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்குடன் முன்னேறுகிறோம். தேவைப்படும் அளவிற்கு கவனமாக பொறுப்புடன் அதனைப் பெற்று மாநில முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறேம்.

### போதைப் பொருள் நடமாட்டம்: தடுக்க தவிர நடவடிக்கை

**செய்தியாளர்:** தமிழ்நாட்டில் இளைஞர்களிடையே திடீரென போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது. இது பற்றிய உங்கள் கருத்து?

**முதல்வர்:** இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களின் நிலையையும் நீங்கள் அறிவீர்கள். நாடு முழுவதும் கவலையளிக்கக்கூடிய ஒன்றை, தமிழ்நாட்டிற்குரியதாக சுருக்கிப் பார்ப்பது சரியான பார்வையாக இருக்காது. அதிமுக ஆட்சியில் போதைப் பொருட்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தவறினார்கள். ஆனால் திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு போதைப் பொருள் விற்போரின் வங்கி கணக்குகளை முடக்குவது, கடைகளை சீல் வைப்பது, அதிகபட்ச சிறை தண்டனை பெற்றுத்தருவது எனத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

**தமிழ்நாட்டை கடனில் மூழ்கடித்து விட்டு காலி கஜானாவை விட்டுச் சென்ற ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி. அதன் பிறகு நிதி நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து திறம்பட்ட நிதி மேலாண்மை மூலம் நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்புக்குள் உள்ள மாநிலம், தமிழ்நாடு. 10 இலட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, பொருளாதாரச் சூழலை நாங்கள் முன்னேற்றியுள்ளோம். முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்பது தமிழ்நாட்டின் அடையாளமாகியுள்ளது. 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்குடன் முன்னேறுகிறோம். தேவைப்படும் அளவிற்கு கவனமாக பொறுப்புடன் அதனைப் பெற்று மாநில முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறேம்.**

குட்கா போன்ற போதை வஸ்துகள் கடந்தகால ஆட்சியில் எந்தளவுக்குப் புழங்கின என்பதும், அன்றைய அமைச்சர்கள், காவல்துறை அதிகாரிகள் வரை அதில் தொடர்புடையவர்களாக இருந்ததையும் தமிழ்நாடு அறியும்.

தற்போது வெளிநாடுகளிலிருந்து கடத்தி வரப்படும் நார்க்கோடிக் வகைகள், இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்து துறைமுகங்கள் வாயிலாக உள்ளே நுழைந்து, இந்தியாவின் அனைத்து திசைகளிலும் உள்ள மாநிலங்களுக்குள் ஊடுருவுகிறது என்பதைப் பத்திரிகைகள் தொடர்ந்து எழுதி வருகின்றன. நுழைவாயிலின் காவல் ஒன்றிய அரசிடம்தான் உள்ளது.

**செய்தியாளர்:** உச்ச நீதிமன்றம்,பண பரிமாற்ற வழக்குத் தொடர்பில் இருக்கும் செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்ந்து நீடிப்பது குறித்து கடுமையாக கருத்து தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தங்களின் கேள்விக்கு உரிய முறையில் பதிலளிக்கவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதே இது தொடர்பாக அரசு சரியான முறையில்தான் செயல்படுகிறதா?

**முதல்வர்:** வழக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கிறது. இக்கேள்விக்கு கருத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது.

**செய்தியாளர்:** ஜனவரி மாதம் சிந்த வெளி அகழாய்வில் கிடைத்த எழுத்து வடிவங்களை புரிந்து கொள்ள வழிவகை செய்தால் ஒரு மில்லியன் டாலர் பரிசளிக்கப்படும் என்று உணர்வுப் பூர்வமாக அறிவீத்தீர்கள். இதில் திராவிட – ஆரிய போராட்டத்தின் நீட்சி உள்ளது என்று கருதலாமா? உங்களின் சாதகமான பதில் என்ன?

**முதல்வர்:** 3000 ஆண்டுகள் பழமையான சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்ற கருதுகோளை வெளியிட்டவர் பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறைத் தலைவரான சர் ஜான் மார்ஷல். அந்த ஆய்வு முடிவுகள் வெளியான நூற்றாண்டில், சிந்துவெளி அகழாய்வில் கிடைத்த எழுத்து வடிவங்களை புரிந்து கொள்ள வழிவகை செய்தால் 1 மில்லியன் டாலர் பரிசுத்தொகை என அறிவிக்கப்பட்டது. இது ஆரிய-திராவிட போராட்டத்தின் நீட்சியல்ல. ஆரியத்துக்கு முந்தைய இந்த மண்ணின் பண்பாடான திராவிடத்தை ஆய்வுப்பூர்வமாகவும் அறிவியல் பூர்வமாகவும் நிலைநாட்டும் முயற்சி. எழுத்து வடிவம் குறித்த வெற்றிகரமான முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**செய்தியாளர்:** உங்கள் புதல்வர் துணை முதலமைச்சர் உதய நிதியின் செயல்பாடுகள் குறித்து நீங்கள் எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?

**முதல்வர்:** துணை முதலமைச்சர் எனக்கும் துணையாக இருந்து பணியாற்றுகிறார். தமிழ்நாட்டு மக்களுக்கும் துணையாக இருந்து திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்.

### ஆளுநர் பதவி என்பது கௌரப் பதவிதான்

**செய்தியாளர்:** ஆளுநர் ஆர்.என். ரவி, 10 சட்ட முன்வடிவுகளை தாமதப்படுத்திய தற்காவும் பின்னர் அவை நிறைவேற்றப்பட வேண்டியவை என்று அறிவித்த உச்ச நீதிமன்றத்தின் சரித்திர தீர்ப்பு குறித்து உங்களின் கருத்து என்ன?

**முதல்வர்:** ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத்தான் சட்டமியற்றும் அதிகாரம் மிக்கது. நியமனப் பதவியான ஆளுநர் பதவி என்பது ஒரு கௌரவப் பதவிதான். சட்டமன்றத்தின் அதிகாரத்தை முடக்க முடியாது என்பதை உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பின் வாயிலாக தெளிவுபடுத்தி ஒன்றிய-மாநில உறவுகளில் அதற்குரிய அதிகாரம், ஒரு தபால்காரருக்குரியதுதான் என்பதைத் தொடர்ந்து தி.மு.க சொல்லி வருகிறது. அது உச்சநீமன்றத்தால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

**செய்தியாளர் :** ஆர்.என்.ரவி தமிழகத்தில் ஆளுநராக தொடர வேண்டும் என்ற கருத்தை இன்னமும் நீங்கள் அப்படியே கொண்டிருக்கிறீர்களா?

**முதல்வர்:** அவருக்குரிய பதவிக்காலம் முடிந்தபிறகும் தமிழ்நாட்டில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரை தமிழுக்கு எதிராகவும், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு எதிராகவும், தமிழ்நாடு என்ற பெயருக்கு எதிராகவும் செயல்படும் ஆளுநர், பச்சையான பா.ஜ.க.காரராகவே வெளிப்படுத்திக் கொள்கிறார். அவருடைய அத்தனை செயல்பாடுகளும் மக்களால் வெறுக்கப்படுவதால், அவர் பதவியில் இருக்கும் வரை பா.ஜ.க.வின் மக்கள் விரோத செயல்பாடுகளை இன்னும் அதிகமாக மேற்கொண்டு, தி.மு.க.வுக்கு மறைமுகமாக உதவி செய்வார்.

**செய்தியாளர்:** குடியரசுத் தலைவர் ‘நீட்’ தேர்வுக்கு எதிரான மசோதாவை நிறுத்தி வைத்திருப்பது ஒரு சர்வாதிகாரத்தனமான நடவடிக்கை என்றும் கூட்டாட்சி வரலாற்றில் ஒரு கறுப்பு அத்தியாயம் என்றும் நீங்கள் தெரிவித்திருந்தீர்கள், ஆனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ‘நீட்’ அமல்படுத்தப்பட்டபோது தி.மு.க. ஒரு அங்கமாகத்தானே இருந்தது?

**முதல்வர்:** தி.மு.க பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது இந்திய மருத்துவக் கவுன்சில் நீட் தேர்வைப் பரிந்துரைத்தபோதே அதனை எதிர்த்து வழக்கு தொடுத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் இந்திய மருத்துவக் கவுன்சிலின் பரிந்துரையை ஏற்கவில்லை. மாநிலங்களின் விருப்ப உரிமையாக அது அமைந்தது. தி.மு.க தொடர்ந்த வழக்கிலும் சாதகமான தீர்ப்பு கிடைத்தது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியிலேயே “நீட் தேர்வு செல்லாது” என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளிவந்து விட்டது. தி.மு.க ஆட்சியில் இருந்த காலம்வரை நீட் தேர்வு தமிழ்நாட்டில் நடைபெறவில்லை. ஏன், அம்மையார் ஜெயலலிதா இருந்தவரைகூட நீட் தேர்வு நடக்கவில்லை. “நீட் தேர்வு செல்லாது” என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு பா.ஜ.க. ஆட்சி காலத்தில்தான் திரும்ப பெறப்பட்டது. பா.ஜ.க.விடம் தங்களை அடகுவைத்துவிட்ட அ.தி.மு.க. தலைவர்கள், பதவியில் நீடிப்பதற்காக பா.ஜ.க. விருப்பப்படி தமிழ்நாட்டில் நீட் தேர்வைத் திணித்தார்கள்.

### தி.மு.க.கூட்டணி வலிமையாக உள்ளது!

**செய்தியாளர்:** பா.ம.க.வில் மூத்த ராமதாசுவுக்கும் இளைய ராமதாசுக்கும் இடையே பிரச்சினைகள் இருப்பதால் பா.ம.க. உங்கள் பக்கமும், விடுதலை சிறுத்தைகள் கட்சி அ.தி.மு.க. பக்கமும் சேரக்கூடும் என்று முணுமுணுத்தல் தெரிகிறதே?

**முதல்வர்:** நீங்களே முணுமுணுப்புகள் என்று சொல்லி விட்டீர்கள். புறந்தள்ளுங்கள். தி.மு.க. கூட்டணி வலிமையாக உள்ளது. தோழமைக் கட்சிகளும் உறுதியாக இருக்கின்றன.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.



சேலம் கோட்டை, அழகிரிநாத சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு பெருவிழா நேற்று (20.04.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி.எம்.சாரதாதேவி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி.வே.சபர்மதி அறங்காவலர் குழு தலைவர், உறுப்பினர் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி பள்ளிகொண்டா பேரூராட்சி பேருந்து நிலையத்தில் நீர் மோர் பந்தலை மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ திறந்து வைத்து பொது மக்களுக்கு மோர், இளநீர், பழங்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர்கள் வெங்கடேசன் கோ.குமரபாண்டியன் பேரூராட்சி செயலாளர் ஜாகீர் உசேன், ஒன்றியக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு கவுன்சிலர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.